

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (23.12.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்த அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களில் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 499.85 ஏக்கர் நிலங்கள் நில எடுப்பிலிருந்து விலக்களித்து ஆணை வழங்கி, தங்களது நீண்ட கால பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு அளித்ததற்காக 10 பயனாளிகள் சந்தித்து, தங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஜி.எஸ். சமீரன் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (23.12.2024) தலைமைச் செயலகத்தில், இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் 11.12.2024 அன்று புதுதில்லியில், இந்திய அளவில் 2024–ஆம் ஆண்டு உட்கட்டமைப்புகளில் தன்னிறைவு பெற்ற ஊராட்சியாக கோயம்புத்தூர் மாவட்டம், எஸ்.எஸ்.குளம் ஊராட்சி ஒன்றியம், கீரநத்தம் ஊராட்சி தேர்வு செய்யப்பட்டு அதற்காக வழங்கப்பட்ட முதல் பரிசுக்கான விருதினை கீரநத்தம் ஊராட்சிமன்ற தலைவர் ரா.பழனிசாமி காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நில எடுப்பிலிருந்து விடுவிப்பு !

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பயனாளிகள் நன்றி!

## நேரில் சந்தித்து தெரிவித்தனர்!

சென்னை, டிச. 24-

**தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நில எடுப்பிலிருந்து சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 499.85 ஏக்கர் நிலங்கள் விடுவிப்பு செய்து - நீண்ட கால பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு அளித்ததற்காக பயனாளிகள் சந்தித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (23.12.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்த அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களில் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 499.85 ஏக்கர் நிலங்கள் நில எடுப்பிலிருந்து விலக்களித்து ஆணை வழங்கி, தங்களது நீண்ட கால பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு அளித்ததற்காக 10 பயனாளிகள் சந்தித்து, தங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 4(1) Notice கொடுக்கப்பட்ட நிலங்கள், கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்ட நிலங்கள் ஆகியவற்றிற்கு நீண்ட காலமாக பொதுமக்கள் தடையின்மை சான்று கோரியும், நில எடுப்பிலிருந்து விலக்களிக்கக் கோரியும் அரசிடம் மனுக்கள் அளித்து வந்தனர். பொதுமக்களின் இக்கோரிக்கை தொடர்பாக முதல்வரின் முன்னெடுப்புத் திட்டத்தின் கீழ் தீர்வு காணும் பொருட்டு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆணையம் மூலம் நில நிர்வாக ஆணையர் தலைமையில் சிறப்புக் குழு அமைத்து 10.10.2023 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

குழுவின் கவனமான பரிசீலனைக்குப் பிறகு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்த அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களில் முதற்கட்டமாக பல்வேறு மாவட்டங்களில் 2002.21 ஏக்கர் நிலங்கள் நில எடுப்பிலிருந்து விலக்களித்து ஆணை வழங்கப்பட்டு, தங்களது நீண்ட கால பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு அளித்ததற்காக முதலமைச்சர் அவர்களை 4.10.2024 அன்று பயனாளிகள் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

அதன் அடுத்த கட்டமாக சிறப்புக் குழு சென்னை மாவட்டத்தில் உள்ள சில இடங்களில் கூட்டு ஆய்வு மேற்கொண்டு அளித்த அறிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்ட சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த கொரட்டூர், கொட்டிவாக்கம், விருகம்பாக்கம், நெசப்பாக்கம், போரூர், நெற்குன்றம், முகப்பேர், அம்பத்தூர், நொளம்பூர் ஆகிய இடங்களில் உள்ள 499.85 ஏக்கர் நிலங்கள் நில எடுப்பிலிருந்து விலக்களித்து ஆணையிடப்பட்டுள்ளது.


தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்டு, சிறப்புக் குழு பரிந்துரையின்படி நில எடுப்பிலிருந்து விலக்களித்து ஆணை பெற்ற சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த 10 பயனாளிகள் முதலமைச்சர் அவர்களை இன்றையதினம் சந்தித்து தங்களது நீண்ட நாள் பிரச்சினைக்கு தீர்வு கண்டதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஜி.எஸ். சமீரன், ஆகியோர் உடனிருந்தனர்.

### தந்தை பெரியார் 51வது நினைவு நாள்!

# முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இன்று தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கிறார்!

## சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!



பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 51வது நினைவு நாளான இன்று (24.12.2024 செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணி அளவில் சென்னை, அண்ணா சாலையில் (சிம்சன் அருகில்) அமைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

நாள் : 22-12-2024

**நே.சிற்றரசு,**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

### விடுதலைப் போராட்ட வீரர் - தகைசால் தமிழர்

# இரா.நல்லகண்ணு நூற்றாண்டு பிறந்தநாள் விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – தோழமைக் கட்சித் தலைவர்கள் வாழ்த்துரை!

சென்னை, டிச. 24-

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் விடுதலைப் போராட்ட வீரர், தகைசால் தமிழர், இரா.நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா, தோழர் கே.டி.கே. தங்கமணி 23வது நினைவு நாள் என மூன்று நிகழ்ச்சிகளை இணைத்து 26.12.2024 - வியாழன் காலை 10 மணியளவில் சென்னை பாலன் இல்லத்தில் நடைபெறுகிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுவின் சார்பில் நடைபெறும் இவ்விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மற்றும் தோழமைக் கட்சித் தலைவர்கள், சான்றோர் பெருமக்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இவ்விழாவில் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு இந்தியக் கம்யூனி1ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

# நெல்லை மாவட்டம் - மணிமுத்தாறிலிருந்து பிசான சாகுபடிக்கு தண்ணீர் !

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு – அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தனர்!

நெல்லை.டிச.24.

நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு அணையிலிருந்து பிசான சாகுபடிக்காக சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மரு.கா. ப.கார்த்திகேயன், நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல்வகாப் (பாளை) ரூபி மனோகரன் (நாங்குநேரி) மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், நெல்லை மாநகராட்சி துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் தண்ணீரை திறந்து வைத்தனர்.

பின்னர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி மணிமுத்தாறு அணையில் இருந்து 440 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.இதன் மூலம் நெல்லை மாவட்டம் நாங்குநேரி,திசையன்விளை மற்றும் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம், ஏரல், திருவைகுண்டம் ஆகிய பகுதிகளில் 12,018 ஏக்கர் விவசாய நிலம் பயன்பெறும்.இன்று முதல் 31.03.2025 முதல் 99 நாட்களுக்கு நீர் இருப்பு மற்றும் நீர்வரத்தைப் பொறுத்து மணிமுத்தாறு பிரதான கால்வாயில் தேவைக்கு ஏற்ப தண்ணீர் திறந்து விடப்படும்.

நெல்லை மாவட்டத்தில் கேரள மாநில மருத்துவக் கழிவுகள் கொட்டப்பட்ட விவகாரம் தொடர்பாக இரு மாநில அரசுகளும் பேசியதைத் தொடர்ந்து கேரள அரசு கொட்டிய கழிவுகளை அப்புறபடுத்தி அள்ளிச் செல்கிறது. வரலாற்றில் இதுவரை இப்படி ஒரு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இனி இதுபோன்ற சம்பவம் நடக்காது, இந்த செயலில் ஈடுபடுபவர்கள் மீது கைது நடவடிக்கை வாகனங்களை பறிமுதல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசால் வாங்கப்பட்டுள்ள கடன் எதற்காக வாங்கப்படுகிறதோ அந்த திட்டங்களுக்காகவே செலவழிக்கப்படுகிறது.ஒன்றிய அரசு அனுமதி அளித்தால் மட்டுமே கடன் வாங்க முடியும் திட்டங்களுக்கு செலவிடவில்லை என்றால் ஒன்றிய அரசு எவ்வாறு அனுமதிக்கும். நீதிமன்றங்களில் கூடுதல் பாதுகாப்பு வழங்க டி.ஜி.பி.உத்தரவிட்டுள்ளார் அங்கொன்றும் இங்கொன்றும் நடக்கும் சம்பவங்களை வைத்து முழுமையாக குற்றம் சாட்ட முடியாது.முதலமைச்சர் அவர்கள் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மணிமுத்தாறு பேரூராட்சி அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் மாஞ்சோலை தொழிலாளர்களுக்கு 12 பேருக்கு நகர்புற வாழ்விட மேம்பாட்டு கழக குடியிருப்பில் வீடுகள் வழங்கினர்.

பின்னர் களக்காடு பச்சையாறு அணையில் இருந்து பேரவை தலைவர் மு.அப்பாவு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு ஆகியோர் தண்ணீர் திறந்துவிட்டனர். இதன் மூலம் மாவட்டத்தில் மடத்துக்கால், நாங்குநேரியான் கால்வாய் மற்றும் பச்சையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள முதல் 5 அணைக்கட்டுகள் மூலம் 9,592 ஏக்கர் விவசாய நிலம் பயன்பெறும். இன்று முதல்100 கன தண்ணீர் 3.103.25 வரை 100 நாட்களுக்கு திறக்கப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

நிகழ்வுகளில் பொதுப்பணித்துறை அலுவலர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### பெரியார் பகுத்தறிவு நூலகம் ஆய்வு மய்யப் பொன் விழா!

# புதிய எணினி (டிஜிட்டல்) நூலகத் திறப்பு விழா!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்து சிறப்புரை!

சென்னை, டிச.24-

**பெரியார் பகுத்தறிவு நூலகம் ஆய்வு மய்யப் பொன்விழா - புதிய எணினி நூலகத் திறப்பு விழா இன்று பெரியார் திடலில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையில் நடைபெறுகின்றது. இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு பெரியார் பகுத்தறிவு எணினி நூலகம் மற்றும் ஆய்வு மய்யத்தைத் திறந்து வைத்து பேருரையாற்றுகிறார்.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

தந்தை பெரியாரின் சிந்தனைகளையும் கொள்கைகளையும் திராவிட இயக்கத்தின் வரலாற்றையும் ஆவணங்களையும் பாதுகாக்கின்ற கருவூலமாகத் திகழும் “பெரியார் பகுத்தறிவு நூலகம் மற்றும் ஆய்வு மய்யம்” 1974–ஆம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று பெரியார் திடலில் தொடங்கப்பட்டது.

தந்தை பெரியார் தம் கடைசி பிறந்த நாளாக அமைந்துவிட்ட 95 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவில் (1973) தனக்கு வழங்கப்பட்ட நன்கொடை களை, அப்படியே அன்றைய திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களிடம் வழங்கி, பெரியார் நூலகம் அமைக்கும் பணியைத் தொடங்கிட ஆணையிட்டார். அவ்வாண்டு டிசம்பர் 24 அன்று தந்தை பெரியார் மறைவுற்றாலும், அதற்கடுத்த பிறந்த நாளுக்குள்ளாகவே பணிகள் நிறைவுற்று, நூலகம் அமைக்கப்பட்டது.

பெரியார் திடலில் அமைக்கப்பட்ட “பெரியார் பகுத்தறிவு நூலகம் - ஆய்வு மய்யத்தை” அன்றைய கல்வி அமைச்சர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் தலைமையில், திராவிடர் கழகத் தலைவர் அன்னை மணியம்மையார் முன்னிலையில், அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார் (17.9.1974).

கடந்த 50 ஆண்டு காலமாக பல்லாயிரக் கணக்கான ஆவணங்களையும், லட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்களையும் காலத்திற்கு ஏற்ப பாதுகாத்துப் பராமரித்து வரும் இந்நூலகத்திலிருந்து ஏராளமான ஆவணங்கள் தொகுப்பு களாகவும், புதிய புத்தகங்களாகவும் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்நாடு, இந்தியா மட்டுமல்லாமல், பல்வேறு நாடுகளிலிருந்து பல நூற்றுக்கணக்கான ஆய்வாளர்கள், ஆய்வு மாணவர்கள் இந்நூலகத்தைப் பயன்படுத்தி திராவிட இயக்க வரலாற்றையும், தந்தை பெரியாரின் கருத்துகளையும் ஆய்வு செய்துள்ளார்கள். இந் நூலகத்திற்கு மூன்று விரிவாக்கத் தளங்களும் பின்னாளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நூலகம் என்பது நாளும் வளர்ந்து கொண்டே இருக்கும் அமைப்பு ஆகும். இந் நூலகத்தின் பொன்விழா ஆண்டான இவ்வாண்டில் (1974-2024) புதிய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு ஏற்பவும், இந் நூலகத்தின் பணிகளை அதிகரிக்கும் வகையிலும் “பெரியார் பகுத்தறிவு எணினி நூலகம் (டிஜிட்டல்)” மற்றும் ஆய்வு மய்யம் புதிய தனி கட்டடத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் எண்மப்படுத்தப்பட்டுள்ள (Digitalized) திராவிட இயக்க நூல்களை, ஆவணங்களை, தமிழில் வெளிவந்துள்ள மின் நூல்களைக் கணினிகளிலேயே படிக்க ஆவன செய்யப்பட்டுள்ளது. இது பழைய ஆவணங்களுக்கு எவ்விதச் சேதமும் இல்லாமல், ஆய்வாளர்கள் எளிதில் படிப்பதற்கான வாய்ப்பை உருவாக்கும்.

மேலும் தமிழில் இயங்கும் மின் நூலகங்களையும், ஆவணக் களஞ்சியங்களையும் இப் புதிய எணினி நூலகத்தின் பயன்பாட்டாளர்கள் இங்கிருந்தே அணுக முடியும்.

அதேபோல் உலகில் முதன்மையான மின் நூலகங்களின் புத்தகங்களையும், ஆவணங்களையும் இங்கிருந்து படிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் புதிய வசதிகளும், தொழில்நுட்ப வாய்ப்புகளும் செய்யப்பட்டுள்ளன.

மூன்று தளங்களில் இதுவரை செயல்படும் நூல கத்தின் மொத்தப் பரப்பளவு 4,450 சதுர அடியாகும். தற்போது கூடுதலாக தனிக் கட்டடத்தில் புதிய எணினி நூலகம் 2,674 சதுர அடியில் அமைந்துள்ளது. இதன் மூலம் மொத்தம் 6,174 சதுர அடியில் நூலகம் செயல்பட உள்ளது.

இந்நூலகத்தில், நகலெடுத்தல் பிரிவு, குறிப்புதவிப் பிரிவு, மின்னாக்கப் பிரிவு, ஒளி, ஒலிப் பதிவுகள் பிரிவு ஆகியன ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. பல லட்சம் பக்கங்களில் திராவிட இயக்க இதழ்கள் எண்மப்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்தனை சிறப்புக்குரிய பெரியார் பகுத்தறிவு எணினி நூலகம் மற்றும் ஆய்வு மய்யத்தினைத் (Periyar Rationalist Digital Library & Research Centre) தந்தை பெரியாரின் 51-ஆம் நினைவு நாளான 2024 டிசம்பர் 24 காலை 10 மணிக்கு பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் செயலாளரும், திராவிடர் கழகத்தின் தலைவருமான தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் தலைமையில், தமிழ்நாடு முதலமைச்சர் சமூக நீதிக்கான சரித்திர நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க உள்ளார்.

தொடர்ந்து பெரியார் திடலில் அமைந்துள்ள தந்தை பெரியார் நினைவிடத்தில் முதலமைச்சர் அவர்களும், திராவிடர் கழகத்தின் தலைவர் அவர்களும், பல்வேறு கட்சித் தலைவர்களும் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்துகிறார்கள்.

அதனைத் தொடர்ந்து நடைபெறும் விழாவில், திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன் வரவேற்புரை ஆற்றிட, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தலைமையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழாப் பேருரை ஆற்றுகிறார்.

விழா நிறைவில் திராவிடர் கழக பொதுச் செயலாளர் வீ.அன்புராஜ் நன்றியுரை ஆற்றுகிறார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்விழாவிற்கு வாரீர், வாரீர் என அழைக்கிறோம் என விழாக் குழுவினர் அழைத்துள்ளனர்.

### புதுக்கோட்டை மாநகரத்தில் கழகம் வளர்த்த

# மாநகரச் செயலாளர் ஆ.செந்தில் மறைவு!

## கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, டிச.24-

புதுக்கோட்டை மாவட்டக் கழக முன்னோடி - மறைந்த மிசா ஆறுமுகம் அவர்களின் மகனும், புதுக்கோட்டை மேயர் திலகவதியின் கணவரும், புதுக்கோட்டை மாநகரச் செயலாளருமான ஆ.செந்தில் அவர்கள் நேற்று (23.12.2024) காலை மாரடைப்பால் காலமானார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது (56).

இதுகுறித்து கழகத்தலைவரும் - முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

புதுக்கோட்டை மாவட்டக் கழக முன்னோடி மறைந்த மிசா ஆறுமுகம் அவர்களின் புதல்வர் - மேயர் திலகவதியின் கணவர் மறைந்த ஆ.செந்தில் அவர்கள் சிறு வயது முதலே கழகத்தின் மீது தீராத பற்று கொண்டு கழகப் பணியாற்றியவர். முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளராகவும், முன்னாள் மாவட்டப் பொருளாளராகவும் பதவி வகித்த அவர் கழகத்தின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டவர். மேலும் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர்.

புதுக்கோட்டை மாவட்ட இளைஞரணி அமைப்பாளராகப் பணியாற்றியபோது கிராமம் கிராமமாகச் சென்று இளைஞர் அணி உருவாகப் பாடுபட்டவர்.

புதுக்கோட்டை நகராட்சி மன்ற உறுப்பினராக இருந்து கழகத் தோழர்களிடமும், பொதுமக்களிடமும் இனிமையுடன் பழகி அனைவரது நன்மதிப்பையும் பெற்றவர்.

மேலும் புதுக்கோட்டையின் கடைசி நகரக் கழகச் செயலாளராகவும், முதல் மாநகரக் கழகச் செயலாளராகவும் பணியாற்றிய பெருமை பெற்றவர்.

அவரது மறைவு புதுக்கோட்டை மாவட்டக் கழகத்தினருக்கு பேரிழப்பாகும். கணவரை இழந்து துயருறும் மேயர் திலகவதிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் மற்றும் கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவரும் - முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### மேயர் திலகவதிக்கு தொலைபேசியில் ஆறுதல்!

மேலும் கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மறைந்த ஆ.செந்தில் அவர்களின் மனைவியும் புதுக்கோட்டை மேயருமான திலகவதியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்தார்.